KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# எல்பிஜி நெருக்கடி: குழாய் எரிவாயு திட்டங்களுக்கு விரைந்து ஒப்புதல்

## மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்

புது தில்லி, மார்ச் 17: மேற்காசிய போரின் தாக்கத்தால் சமையல் எரிவாயு சிலிண்டர் (எல்பிஜி) விநியோகத்தில் நெருக்கடி நிலவும் சூழலில், நகர்ப்புறங்களில் குழாய் வழி எரிவாயு (பிஎன்ஜி) விநியோக திட்டங்களுக்கு விரைந்து ஒப்புதல் வழங்க வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

போர் முடிவுக்கு வரும் அறிகுறி தென்படாத நிலையில், மாநிலங்களுக்கு மேற்கண்ட அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மின்சார அடுப்பு உள்பட மாற்று சமையல் வழிமுறைகளை ஊக்குவிக்கவும் மத்திய அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

புது தில்லியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பல்வேறு அமைச்சக செயலர்களின் கூட்டு செய்தியாளர்கள் சந்திப்பில் இது தொடர்பாக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை இணைச் செயலர் சுஜாதா சர்மா செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

நிலைமை தொடர்ந்து கவலைக்குரியதாக உள்ள போதிலும், வீட்டு உபயோக எல்பிஜி நுகர்வோருக்கு முன்பைப் போல்வே விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் உற்பத்தியை அதிகரிக்க அறிவுறுத்தப்பட்டு, வீட்டு உபயோக எல்பிஜி விநியோகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதால் இது சாத்தியமாகிறது.

உணவகங்கள் மற்றும் பிற பயன்பாடுகளுக்கான வணிக எல்பிஜி விநியோகம் முதலில் வெகுவாக குறைக்கப்பட்டு, இப்போது ஐந்தில் ஒரு பங்கு விநியோகம் தொடங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சூழலில், நாம் மாற்று வழிமுறைகளை ஆராய வேண்டியது அவசியம்.

**பீதியில் அதிகரிக்கும் பதிவுகள்:** மேற்காசிய போருக்கு முன்பு எல்பிஜி சராசரி பதிவு 55 லட்சமாக இருந்த நிலையில், மக்களின் பீதியால் கடந்த மார்ச் 13-இல் இந்தப் பதிவு உச்சகட்டமாக 87.7 லட்சத்தை எட்டியது. கடந்த திங்கள்கிழமை இது 70 லட்சமாக குறைந்தது.

கடந்த மார்ச் 13-ஆம் தேதி 62.5 லட்சம் சிலிண்டர்களும், மார்ச் 14-ஆம் தேதி 60 லட்சம் சிலிண்டர்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. போருக்கு முன்பு விநியோக எண்ணிக்கை 50 லட்சமாக இருந்தது.

வீடுகளுக்கான தேவையை பூர்த்தி செய்யும் அளவுக்கு போதுமான எல்பிஜி விநியோகம் உள்ளது என்ற அரசின் உறுதிமொழிக்குப் பிறகும் மக்கள் பீதியில் முன்பதிவு மேற்கொள்வது தொடர்கிறது.

எல்பிஜி உள்நாட்டு உற்பத்தி 38 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. எல்பிஜி விநியோகம் மீதான அழுத்தத்தைக் குறைக்க வணிக மற்றும் வீட்டு உபயோக எல்பிஜி பயன்பாட்டாளர்கள் குழாய் வழி இயற்கை எரிவாயுவை (பிஎன்ஜி) பயன்படுத்த ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர்.

**12,000 இடங்களில் சோதனை:** நகர்ப்புற குழாய்வழி எரிவாயு விநியோக கட்டமைப்பை விரிவாக்கும் நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இத்தகைய திட்டங்களுக்கு விரைந்து அனுமதி வழங்கும்படி அனைத்து மாநில அரசுகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குழாய் வழி எரிவாயு விநியோகத்தில் நிலுவைத் திட்டங்களுக்கு தாமாக அனுமதி வழங்குதல், புதிய திட்டங்களுக்கு 24 மணிநேர காலக்கெடுக்குள் ஒப்புதல் அளித்தல், சாலை மறுசீரமைப்பு கட்டணங்களை ரத்து செய்தல், பணி வரம்புகளைத் தளர்த்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எல்பிஜி சிலிண்டர்களின் பதுக்கல் மற்றும் கள்ளச் சந்தையில் விற்கப்படுவதைத் தடுக்க நாடு முழுவதும் 12,000 இடங்களில் சோதனை நடத்தப்பட்டு, 15,000 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றார் அவர்.

முன்னதாக, குழாய் வழி எரிவாயு இணைப்பு பெற்றுள்ளவர்கள், எல்பிஜி சிலிண்டரை பயன்படுத்த தடை விதித்து மத்திய அரசு சில தினங்களுக்கு முன் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல்: ஐ.நா.வில் பாகிஸ்தான் மீது இந்தியா சாடல்

நியூயார்க், மார்ச் 17: ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச் சபையில் பாகிஸ்தானை இந்தியா சாடியது.

இஸ்லாமிய வெறுப்பை எதிர்த்து போராடுவதற்கான சர்வதேச நாளையொட்டி, ஐ.நா. பொதுச் சபையில் ஐ.நா.வுக்கான இந்திய தூதர் பர்வதனேனி ஹரீஷ் திங்கள்கிழமை பேசியதாவது:

இந்தியாவுக்கு மேற்கே உள்ள நாடு (பாகிஸ்தான்), அதன் அருகில் உள்ள நாடுகளை இஸ்லாமிய வெறுப்பு கொண்டதாக கற்பனைக் கதைகளை ஜோடிப்பதில் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

அந்நாட்டில் (பாகிஸ்தான்) அகமதியர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் கொடூரமான அடக்குமுறை, அந்நாட்டிலிருந்து நிர்கதியான ஆப்கன்களை பெருமளவில் வெளியேற்றுதல், புனித ரமலான் மாதத்தில் மேற்கொள்ளப்படும் வான்வழி குண்டுவீச்சுத் தாக்குதல் (ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தானின் தாக்குதல்) ஆகியவற்றை என்ன பெயரிட்டு அழைப்பது என்று தெரியவில்லை.

57 உறுப்பு நாடுகளை கொண்ட இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பை இந்தியாவுக்கு எதிரான ஆயுதமாக்க பாகிஸ்தான் திட்டமிட்டு முயற்சித்து வருகிறது. அந்த அமைப்பு இந்தியாவுக்கு எதிராக தவறான, அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து முன்வைத்து வருகிறது. மத அடையாளத்தை ஆயுதமாக்கும் போக்கும், ஆபத்துகளும் அதிகரித்து வருவதை ஐ.நா. கவனத்தில் கொள்ள வேண்டும்.

உலகில் முஸ்லிம்கள் அதிகம் உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்தியாவில் 20 கோடிக்கும் அதிகமான முஸ்லிம்கள் உள்ளனர். ஜம்மு-காஷ்மீர் உள்பட இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் தங்களுக்காகப் பேசும் பிரதிநிதிகளை சுயமாகத் தேர்வு செய்கின்றனர்.

மதத்தை அரசியல்மயமாக்குவது குறைகளைக் களையாது என்பதற்கான சாட்சியம் வரலாற்றில் உள்ளது. மதத்தின் பெயரால் வன்முறையில் ஈடுபடுவது, வெறுப்புணர்வை வெளிப்படுத்துவது ஆகியவற்றுக்கு இந்தியா கண்டனம் தெரிவிக்கிறது என்றார்.

# பாரத் டாக்ஸி தளத்தில் 21.34 லட்சம் பேர் பதிவு

## அமித் ஷா

புது தில்லி, மார்ச் 17: பாரத் டாக்ஸி தளத்தில் 21.34 லட்சம் பயணர்கள் மற்றும் 2.31 லட்சம் ஓட்டுநர்கள் பதிவு செய்துள்ளதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.



8 கூட்டுறவு நிறுவனங்களால் பாரத் டாக்ஸி சேவை நிகழாண்டு பிப்ரவரி 5-ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது. இது தற்போது தில்லி, குருகிராம், நொய்டா, ஃபரீதாபாத், காஜியாபாத் மற்றும் அகமதாபாத், ராஜ்கோட், சோம்நாத் மற்றும் துவாரகா ஆகிய சில நகர்ப்பகுதிகளில் மட்டுமே செயல்பாட்டில் உள்ளது.

இதுதொடர்பாக மக்களவையில் அமித் ஷா அளித்த எழுத்துபூர்வ பதிலில், 'பாரத் டாக்ஸி சேவையில் ஓட்டுநர்களிடம் இருந்து கமிஷன் பெறப்படுவதில்லை. லாபம் முழுவதும் ஓட்டுநர்களுக்கே வழங்கப்படுகிறது.

முறையான மற்றும் வெளிப்படையான பயணக் கட்டணம், கைப்பேசி வாயிலாக எளிய முன்பதிவு, வாகன கண்காணிப்பு, பல மொழிகளில் தகவல்கள், 24 மணி நேர நுகர்வோர் சேவை என பல்வேறு வசதிகளுடன் பாரத் டாக்ஸி இயங்கி வருகிறது.

மகளிர் பயணிகளுக்கென மகளிர் ஓட்டுநர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தற்போது குறிப்பிட்ட சில பெரும் நகரங்களில் மட்டுமே அறிமுகமாகியுள்ள இந்தச் சேவை விரைவில் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. 2026, மார்ச் 1-ஆம் தேதி நிலவரப்படி பாரத் டாக்ஸி தளத்தில் 21.34 லட்சம் பயணர்கள் மற்றும் 2.31 லட்சம் ஓட்டுநர்கள் பதிவு செய்துள்ளனர்.

**ரூ.8,783 கோடி திருப்பியளிப்பு:** சஹாரா கூட்டுறவு சங்கங்கள் குழுமத்தில் முதலீடு செய்திருந்தவர்களில் 40.33 லட்சம் பேருக்கு ரூ.8,783 கோடி திருப்பியளிக்கப்பட்டுள்ளது.

2026 பிப்ரவரி வரை சிஆர்சிஎஸ்-சஹாரா பணம் திருப்பியளிக்கும் வலைதளத்தில் 1.45 கோடி விண்ணப்பங்களும் 4.06 கோடி முதலீட்டாளர்களின் கோரிக்கைகளும் பெறப்பட்டன' எனத் தெரிவிக்கப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவைத் தொடர்ந்து சஹாரா கூட்டுறவு சங்கங்கள் குழுமத்தில் முதலீடு செய்தவர்களுக்கு மத்திய அரசு பணத்தை திருப்பியளித்து வருகிறது. அதன்படி ஒரு முதலீட்டாளருக்கு ரூ.50,000 வரை பணம் திருப்பியளிக்கப்படுகிறது.

# 2033-க்குள் அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு

## நாடாளுமன்றத்தில் நிர்மலா சீதாராமன் தகவல்

**புது தில்லி, மார்ச் 17:** 2033-ஆம் ஆண்டுக்குள் நாட்டில் உள்ள அனைவரும் மருத்துவக் காப்பீடு வரம்புக்குள் கொண்டுவரப்படுவர் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது எழுப்பப்பட்ட துணை கேள்விகளுக்கு அவர் செவ்வாய்க்கிழமை அளித்த பதில்: நாட்டில் காப்பீடுத் துறை வேகமாக விரிவடைந்து வருகிறது. 2024-25-ஆம் நிதியாண்டில் 58 கோடி பேர் காப்பீடு வரம்புக்குள் கொண்டுவரப்பட்டனர். சுகாதார காப்பீடுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளிக்கிறது. 2033-ஆம் ஆண்டுக்குள் நாட்டில் அனைவரையும் மருத்துவக் காப்பீடு வரம்புக்குள் கொண்டுவந்து விடலாம் என்ற நம்பிக்கை மத்திய அரசுக்கு உள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் சட்டத்துக்குப் புறம்பாக செயல்பட்ட ரிலையன்ஸ் ஜெனரல் காப்பீட்டு நிறுவனம், ஹெச்டிஎஃப்சி, எஸ்பிஐ ஆயுள் காப்பீடு நிறுவனங்கள் உள்ளிட்ட தனியார் காப்பீடு நிறுவனங்களுக்கு ரூ. 1 கோடி முதல் 2 கோடி வரை அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**முத்ரா கடன் ரூ.39.48 லட்சம் கோடி:** கடந்த 2022-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் கடந்த ஆண்டு மார்ச் வரை, பிரதமரின் முத்ரா கடன் திட்டத்தின் கீழ், ரூ.15.50 லட்சம் கோடி கடன் அளிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையில் 65 சதவீதம் பெண் தொழில்முனைவோருக்கு அளிக்கப்பட்டுள்ளது.



நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை பேசிய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட 2015-ஆம் ஆண்டுமுதல் இதுவரை, மொத்தம் ரூ.39.48 லட்சம் கோடி கடன் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகையில் சுமார் 2 சதவீதம் வாராக் கடனாக உள்ளது. வாராக் கடனை வசூலிக்க வங்கிகள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. மிகப் பெரிய வங்கிக் கடன் திட்டங்களில் ஒன்றாக உள்ள முத்ரா கடன் திட்டம், கடனுக்குப் பிணை எதுவும் வழங்க இயலாத மக்களைச் சென்றடைந்துள்ளது.

**நிறுவனங்களுக்கு ரூ.20 கோடி அபராதம்:** நிறுவனங்கள் சட்டத்தின் கீழ், ஒரு நிதியாண்டில் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (சிஎஸ்ஆர்) செயல்பாடுகளுக்கு குறிப்பிட்ட வகையான லாபகர நிறுவனங்கள், தங்கள் 3 ஆண்டு வருடாந்திர சராசரி லாபத்தில் குறைந்தபட்சம் 2 சதவீதத்தை செலவிட வே[illegible]ர் செலவினம் தொடர்பா[illegible]டிவும் நிறுவனங்களின் வாரியத்தை சார்ந்ததாகும்.

சிஎஸ்ஆர் நிதிக்கு எவ்வளவு செலவிட வேண்டும், எங்கு செலவிட வேண்டும் என்பதை நிறுவனமும், அதன் வாரியமும்தான் முடிவு செய்யும். அதில் மத்திய அரசு தலையிட முடியாது. சிஎஸ்ஆர் விதிமுறைகளைப் பின்பற்றாத நிறுவனங்கள் மீது நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவுகளின் கீழ், நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி சிஎஸ் ஆர் விதிமுறைகளை மீறியதற்காக 2022-23-ஆம் நிதியாண்டில் 6 நிறுவனங்கள் மீது ரூ.2.97 கோடி, 2023-24-இல் 11 நிறுவனங்கள் ரூ.3.32 கோடி, 2024-25-இல் 13 நிறுவனங்கள் மீது ரூ.13.65 கோடி அபராதம் விதிக்கப்பட்டது என்றார்.

# கடல்சார் துறைகளில் சுயசார்பு அதிகரிக்க சென்னை ஐஐடி உதவி

## வி.காமகோடி

சென்னை, மார்ச் 17: கடல் பொறியியல் துறை, கடல்சார் துறையில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கு சுயசார்பு தளங்களை அதிகரிக்க சென்னை ஐஐடி உதவியாக உள்ளது என அதன் இயக்குநர் வி.காமகோடி தெரிவித்தார்.

சென்னை ஐஐடி-இன் கடல் பொறியியல் துறையின் பொன் விழா கொண்டாட்டங்களின் தொடக்க விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஐஐடி இயக்குநர் வி.காமகோடி பேசியதாவது:

1977-ஆம் ஆண்டு 'கடல் பொறியியல் மையம்' ஐஐடியில் தொடங்கப்பட்டு, பின்னர் 1982-ஆம் ஆண்டில் ஒரு முழுமையான துறையாக உருவாக்கப்பட்டது. கடல்சார் பொறியியல், கப்பல் வடிவமைப்பு போன்ற கல்வியோடு, கடலோர தொழில்நுட்பம் ஆராய்ச்சி மேம்பாட்டுடன் இந்தத் துறை வளர்ந்துள்ளது.

நாட்டின் கடலோரப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு முயற்சிகள், துறைமுக மேம்பாட்டு ஆய்வுகள், தூர்வாரும் பணிகள் குறித்த மதிப்பீடுகள், கடல்சார் நீரியக்கவியல் ஆராய்ச்சிகள் உள்ளிட்ட பல தேசிய திட்டங்களுக்கு இந்தத் துறையின் நிபுணத்துவம் பெரிதும் உதவியாக இருந்துள்ளது.



சென்னை ஐஐடி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கடல் பொறியியல் பொன்விழா கொண்டாட்ட தொடக்க விழாவில் இலச்சினையை வெளியிட்ட ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, கடல்சார் தொழில்நுட்பச் சங்க தலைமை நிர்வாக அதிகாரி கிறிஸ் ஆஸ்ட்ராண்டர், கடல் பொறியியல் துறைத் தலைவர் அப்துஸ் சமத், பொன்விழா குழுத் தலைவர் எஸ்.ஏ. சன்னசிராஜ்.

நமது நாட்டின் பல்வேறு நிறுவனங்களுக்கு சுயசார்பு தளங்களை சென்னை ஐஐடி வழங்கியுள்ளது. இதன்மூலம் இந்தியா வெளிநாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை கணிசமாகக் குறைந்துள்ளது. மேலும் நாடு, 'நீலப் பொருளாதாரம்', ஆழ்கடல் ஆய்வுத் திட்டம், கப்பல் கட்டுமானம், பசுமைத் துறைமுக மேம்பாடு, பருவநிலை மாற்றத்துக்கு தகுந்த கடலோரப் பகுதியின் தாங்கும்திறனை மேம்படுத்தல் ஆகியவற்றின் மீது தனது கவனத்தை வலுப்படுத்தி வருகிறது என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில், ஐஐடியின் கடல் பொறியியல் துறைத் தலைவர் அப்துஸ் சமத், பொன்விழா நிகழ்வுகளின் ஏற்பாட்டுக் குழுத் தலைவரான எஸ்.ஏ.சன்னசிராஜ், சர்வதேச கடல்சார் தொழில்நுட்பச் சங்கத்தின் தலைமை நிர்வாக அதிகாரி கிறிஸ் ஆஸ்ட்ராண்டர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அடுத்த ஓராண்டுக்கான பொன் விழாக் கொண்டாட்டங்கள், கல்வி நிகழ்வுகள், சர்வதேச நிகழ்வுகள், சென்னை ஐஐடி சார்பில் நாட்டில் மேற்கொண்டுவரும் அதிநவீன உள்கட்டமைப்புகள் போன்ற விவரங்களும் இந்த நிகழ்வில் வெளியிடப்பட்டன.

# கீழடி உள்ளிட்ட 8 இடங்களில் அகழாய்வுப் பணி: மத்திய தொல்லியல் துறை ஒப்புதல்

**சென்னை, மார்ச் 17:** சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி உள்பட தமிழகத்தின் 8 இடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு மத்திய தொல்லியல் துறை ஒப்புதல் வழங்கியுள்ளது.

தமிழக தொல்லியல் துறை சார்பில் கீழடியில் 11-ஆவது கட்டம், ஆதிச்சநல்லூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட 8 இடங்களில் அகழாய்வு மேற்கொள்ள மத்திய தொல்லியல் துறையிடம் கடந்த 2025 ஜூலை மாதம் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருந்தன. இந்த முன்மொழிவுகள் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற இந்திய தொல்லியல் துறை தலைவரின் கூட்டத்திலும் பரிசீலிக்கப்பட்டன. எனினும், ஒப்புதல் வழங்குவதில் சுமார் 8 மாதங்களாக தாமதம் ஏற்பட்டிருந்தது. இதனால் அகழாய்வுப் பணிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டது.

**முதல்வர் வலியுறுத்தல்:** இதையடுத்து தமிழகத்தில் அகழாய்வு மேற்கொள்ள உகந்த காலம் ஜனவரி முதல் ஜூலை வரை மட்டுமே இருப்பதாகவும், பருவமழை காரணமாக அதன் பின்னர் களப்பணிகள் பாதிக்கப்படும் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் மத்திய அரசிடம் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில் தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, கீழடி உள்ளிட்ட 8 இடங்களில் அகழாய்வுப் பணிகளை மேற்கொள்ள மத்திய தொல்லியல் துறை அனுமதி அளித்துள்ளது. கடந்த மார்ச் 13-ஆம் தேதி இதற்கான அதிகாரபூர்வ ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கடந்த 1959-ஆம் ஆண்டின் பழங்கால நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் இடங்கள் மற்றும் எச்சங்கள் விதிகளின் கீழ், நிபுணர் குழுவின் பரிந்துரையை ஏற்று இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**விரைவில் பணிகள் தொடக்கம்:** இதன் மூலம் தமிழகத்தின் தொன்மையான நகர நாகரிகத்தை வெளிக்கொணரும் அடுத்தகட்டப் பணிகள் மிக விரைவில் தொடங்கவுள்ளன. இந்த அகழ்வாராய்ச்சிப் பணிகளுக்காக, தமிழக அரசு தனது 2025-26 நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே நிதி ஒதுக்கீடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

**8 இடங்களில் அகழாய்வு:** எனவே, மத்திய அரசு வழங்கியுள்ள ஒப்புதலின் அடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தின் கீழடி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 11-ஆம் கட்ட ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன.

இதுதவிர தூத்துக்குடி மாவட்டம் பட்டினமருதூர், தென்காசி மாவட்டம் கரிவலம்வந்தநல்லூர், கடலூர் மாவட்டம் மணிக்கொல்லை, விழுப்புரம் மாவட்டம் ஆதிச்சனூர், கோவை மாவட்டம் வெள்ளலூர், சேலம் மாவட்டம் தெலுங்கனூர்-மாங்காடு மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள முக்கிய வரலாற்றுத் தலங்களிலும் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தமிழகத்தின் பல்வேறு நிலப்பரப்புகளில் வாழ்ந்த பண்டைய தமிழர்களின் வாழ்வியல் முறைகளை ஒட்டுமொத்தமாகப் புரிந்துகொள்ள இந்த விரிவான ஆய்வுகள் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் 'தர்பீடோ' குடுவை



வெம்பக்கோட்டை அகழாய்வில் கிடைத்த தர்பீடோ குடுவை வடிவ பானை ஓடுகள்.

**சாத்தூர், மார்ச் 17:** வெம்பக்கோட்டை அகழாய்வில் 'தர்பீடோ' குடுவை வடிவப் பானை ஓடுகள் கிடைத்தன.

இது தொல் தமிழர் கடல் வாணிப வரலாற்றுக்கு பெரும் சான்று என அமைச்சர் தங்கம் தென்னரசு எக்ஸ் வலைதளத்தில் பதிவு செய்தார்.

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை விஜயகரிசல்குளம் பகுதியில் தமிழக அரசின் தொல்லியல் துறை சார்பில் மூன்று கட்டங்களாக அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதில் சுடுமண் முத்திரைகள், கண்ணாடி மணிகள், சங்கு வளையல்கள், தங்க மணிகள், செவ்வக விளையாட்டுப் பொருள்கள், நுண்கற்காலக் கருவிகள், பாசிமணிகள், சுடுமண்ணாலான காதணிகள், பொம்மைகள், மோதிரங்கள், சில்லு வட்டுகள், இரும்பு உருக்கு கழிவுகள், யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட பொருள்கள் என பல்வேறு அரிய தொல்பொருள்கள் கிடைத்தன.

மூன்று கட்ட அகழ்வாய்விலும் கிடைத்த தொல்பொருள்களையும், பானையோடுகளையும் தரம் பிரிக்கும் பணியின்போது தர்பீடோ எனப்படும் குடுவை வடிவ பானை ஓடுகள் கண்டறியப்பட்டன.

இந்த ஓடுகள் ரோமானிய, மத்திய கிழக்குப் பகுதிகளிலிருந்து ஆலிவ் எண்ணெய், ஒயின் போன்ற திரவப் பொருள்களைக் கொண்டுவர பயன்படுத்தப்பட்டவை என வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தற்போது வெம்பக்கோட்டையில் கிடைத்த தர்பீடோ குடுவை ஓடுகள் மூலம் கடல் வழியாக வைப்பாற்றங்கரையில் வாணிபம் நடைபெற்றது தெரியவருகிறது.

இது பண்டைய தமிழர்களின் கடல் வாணிபத் திறனை உறுதிப்படுத்தும் முக்கிய ஆதாரமாகும்.

இந்த நிலையில், கடல் வாணிபத்தின் சான்றாக 'தர்பீடோ' குடுவை வடிவப் பானை ஓடுகள் கண்டறியப்பட்டது பண்டைய தமிழ் நில வாணிபர்கள் குறித்த வரலாற்றுக்கு மற்றுமொரு ஆதாரமாக அமைந்துள்ளது என அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.

இது குறித்து எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்ட பதிவு:

விருதுநகர் மாவட்டம் - வெம்பக்கோட்டையில் நடைபெற்று வந்த மூன்றாம் கட்ட அகழாய்வுப் பணிகள் மூலம் 'தர்பீடோ' என்ற குடுவை வடிவப் பானை ஓடுகள் கிடைத்துள்ள செய்தி, தொல் தமிழர் வரலாற்றை ஆவணப்படுத்துவதில் முக்கிய மைல்கல்.

திரைகடலோடியும் திரவியம் தேடிய பண்டைய தமிழ் நில வாணிபர்கள் குறித்த வரலாற்றுக்கு மற்றுமொரு சான்றாகக் கிடைத்திருக்கும் இந்த அரிய குடுவை ஓடுகள், வைப்பாறு நதிக்கரையைச் சார்ந்த பகுதிகளில் செழித்திருந்த தமிழரின் பன்னாட்டு வாணிபத் தொடர்புகளை உறுதி செய்கின்றன. தொன்மை மிகுந்த 'தமிழ் வணிக பெருவழி' குறித்த அடுத்த கட்ட ஆய்வுகளுக்கு வழிகாட்டியாகவும் இந்த 'தர்பீடோ'க்கள் விளங்குகின்றன என்றார் அவர்.